முதலாவது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள். 05.03.2025

O.S.No. 188 / 2021

வா.சா.1 ஆல்ப்ரட் சத்யசேகர்

3 வது பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி

1) நான் இன்று நீதிமன்றத்தில் வா.சா.ஆ.13 ன் தட்டச்சு தெளிவு நகலை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.13 உத்தரவு பத்தி 6 ல் திருச்செந்தூர் சுப்பிரமணிய தேவஸ்தானம் கட்டளை தர்மம் குறித்து மேற்படி சீராய்வு மனு செட்டில்மெண்ட் அலுவலகம் முன் தாக்கல் செய்த பின்தான் தெரியும் என்று குறிப்பிட்டுள்ளார் என்றால் அந்த மனுதாரர் குமாரசாமி பணிக்கர் பட்டா கேட்டு பட்டாதுறையிடம் மனு தாக்கல் செய்த பின்பு தெரியவந்தது என்று குறிப்பிட்டுள்ளார். அந்த வா.சா.ஆ.13 உத்தரவு பத்தி 6 ல் சுப்பிரமணியசுவாமி தேவஸ்தானம் திருச்செந்தூர் பதிலுரையில் புல எண்.3147 உடன் சேர்ந்து 4 புலத்தில் உள்ள சொத்துக்கள் பார்வதிபுரம் உடமூட்டு தர்மம் பெயரில் தண்டப்பெயர் 3706 ன்படி கோவிலுக்கு பாத்தியப்பட்டது என சொல்லியுள்ளார் என்றால் அவ்வாறு கோரியுள்ளார்.

2) மறு நில அளவை காலகட்டத்தில் அந்த தர்மம் திருச்செந்தூர் சுப்பிரமணியசுவாமி கோவிலால் நிர்வகிப்படவில்லை என்றால் மறுநிலஅளவை எந்த காலகட்டத்தில் வந்தது என்று எனக்கு தெரியாது. வா.சா.ஆ.13 உத்தரவு எனக்கு எப்போது தெரியும் என்றால் 26.08.2021 அறிவிப்பு ஒட்டிய பின் தெரியும். என் முன்ஜன்மிகள் பெயரில் பட்டா இருந்ததை பார்த்தேனா என்றாலும் சரிபார்த்தேனா என்றாலும் ஆம். நான் என் முன்ஜன்மிகள் பெயரில் உள்ள பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேனா என்று பார்த்துதான் சொல்ல முடியும். சாட்சி வாதி சான்றாவணங்களை பார்வையிட்டுவிட்டு தாக்கல் செய்யவில்லை என தெரிவித்தார். நான் எவ்வளவு காலமாக அந்த கட்டிடத்தில் வாடகைக்கு உள்ளேன் என்றால் 2011 ம் ஆண்டு முதல் வாடகைக்கு உள்ளேன்.

3) நான் அந்த கட்டிடத்தை எந்த காரணத்திற்காக வாடகைக்கு எடுத்து வாடகை கொடுத்து வந்தேன் என்றால் கட்டிடத்தின் மாடியில் குடியிருக்கவும் கட்டிடத்தின் தரைதளத்தில் மருத்துவமனை நடத்தவும் வாடகைக்கு எடுத்தேன். நான் 2011 ம் ஆண்டு மருத்துவமனை நடத்துவதற்கு பதிவு செய்தேனா என்றால் அச்சமயம்

கிளினிக்கல் எஸ்டாப்லிஸ்மெண்ட் ஆக்ட் அமலுக்கு வரவில்லை. அது அமலுக்கு வந்த பின் மருத்துவமனை நடத்த நான் பதிந்துள்ளேன். நான் அந்த கட்டிடத்தில் மருத்துவமனை நடத்த ப்ரொபஸனல் டேக்ஸ் கட்டி வருகிறேனா என்றால் இல்லை நான் கட்டிட வரி கட்டி வருகிறேன். மருத்துவமனையை நான் எந்த பெயரில் 2011 முதல் நடத்தி வருகிறேன் என்றால் ஷேக்கினா ஆர்த்தோ மருத்துவமனை என்ற பெயரில் நடத்தி வருகிறேன். என் மனைவி தோல் சிகிச்சை நிபுணராக அந்த கட்டிடத்தில் சிகிச்சை அளித்து வந்தார் என்றால் இல்லை. என் மனைவி மருத்துவர் என்றால் இல்லை. அந்த கட்டிடத்தில் தோல் சிகிச்சை யார் செய்து வந்தார்கள் என்றால் அவ்வாறு தோல் சிகிச்சை நிபுணர் அந்த கட்டிடத்தில் மருத்துவம் செய்யவில்லை.

4) அந்த பகுதியில் ஷேக்கினா மருத்துவமனை என்ற மருத்துவமனை என்னுடையதுதான் என்றால் ஷேக்கினா ஆர்த்தோ மருத்துவமனை என் மருத்துவமனை ஆகும். பார்வதிபுரம் பகுதியில் ஷேக்கினா பெயர் கொண்ட மருத்துவமனை வேறு உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. நான் அரசுப்பணியில் 2008 ம் ஆண்டு முதல் உள்ளேன். ஷேக்கினா ஆர்த்தோ மருத்துவமனையின் உரிமையாளர் நான் என்றால் சரியல்ல என் சகோதரி உரிமையாளர் ஆவார் நான் அந்த மருத்துவமனையில் ஆலோசகராக உள்ளேன். ஷேக்கினா ஆர்த்தோ மருத்துவமனைக்கு 2016, 2017 காலகட்டத்தில் வரப்பெற்ற அழைப்பாணைகள் கடிதங்கள் குறித்து எந்த விவரமும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஆகையால் இந்து சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 78 ன்படி 2016 ம் ஆண்டு எடுக்கப்பட்ட விவரம் குறித்து எனக்கு தெரியாது என்றால் எனக்கு தெரிந்து அவ்வாறு எங்கள் கட்டிடம் குறித்து எந்த நடவடிக்கையும் நடைபெறவில்லை.

5) நான் வழக்குச்சொத்தை விலை வாங்க துறை அனுமதி வாங்கியுள்ளேனா என்றால் வாங்கவில்லை. நான் அரசு ஊழியர் என்பதால் அசையா சொத்து வாங்குவதற்கு முன்பு அந்த சொத்து உரிமையாளர் விவரங்கள் தெரிவித்து நான் பணிபுரியும் துறையில் முன் அனுமதி பெற வேண்டும் என்றால் எனக்கு அது குறித்து எனக்கு தெரியாது. நான் அரசு ஊழியர் என்பதால் அரசு விதிகள் எனக்கு பொருந்தும் என்றாலும் அதன்படி நான் அசையா சொத்து வாங்குவதற்கு முன்பு என் துறை முன் அனுமதி பெற வேண்டும் என்றாலும் அந்த விவரம் எனக்கு தெரியும் என்றாலும்

அவ்வாறு இந்த வழக்குச்சொத்தை வாங்க நான் முன் அனுமதி கோரியிருந்தால் வழக்குச்சொத்து அறநிலையத்துறை சொத்து என்பதால் எனக்கு முன் அனுமதி மறுக்கப்பட்டிருக்கும் என தெரிந்து நான் அவ்வாறு முன் அனுமதி பெறாமல் வழக்குச்சொத்து குறித்து என் பெயரில் ஆவணம் எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்குச்சொத்தை வா.சா.ஆ.1 ஆவணத்தை தெரிந்துதான் வாங்கினேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 26.08.2021 அன்று அவர்கள் அறிவிப்பை ஒட்டிய பின்பு நான் ஆவணங்களை எடுத்து பார்த்தபோது தெரியவந்தது.

6) வா.சா.ஆ.1 சான்றிட்ட நகல் ஆகும். வா.சா.ஆ.1 2020 ம் ஆண்டு எனக்கு பதிவு அலுவலகத்தால் வழங்கப்பட்டதாக குறிப்பு உள்ளது என்றால் 19.12.2020 வழங்கப்பட்டதாக உள்ளது. நான் அந்த சொத்தை வாங்குவதற்கு சட்ட கருத்துரை பெற்றிருந்தேன் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம். வா.சா.ஆ.1 ஆவணத்தில் 3 வது பக்கத்தில் கடைசி வரிகளில் கட்டிடம் மற்றும் மனை அனுபவ அவகாசம் மட்டுமே உள்ளது என்றும் எனக்கு தரை அவகாசம் இல்லாததினால் போக்குவரத்து செய்யான் அவசியம் இல்லாததும் என்று குறிப்பிட்டு அந்த வா.சா.ஆ.1 ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது அதனை தொடர்ந்து 4, 5 வரிகள் உள்ளது. அந்த சரத்தின்படி செண்பக அம்மாள் மற்றும் குமாரசாமி பணிக்கருக்கு அந்த தரையின் மீது உரிமை இல்லை என தெளிவாகிறது என்றால் சரியல்ல. குமாரசாமி பணிக்கர், செண்பகம் அம்மாள் ஆகியோருக்கு அடிமனையில் முழு உரிமை இருந்ததாக நான் சொல்வது வா.சா.ஆ.1 ற்கு முரணானது என்றால் சரியல்ல.

7) குமாரசாமி பணிக்கர் பெயரில் பட்டா இருந்ததை நான் பார்த்தேனா என்றால் ஆம் அதனை தாக்கல் செய்யலாம் சாட்சி தற்போது அ பதிவேட்டில் குமாரசாமி பணிக்கர் பெயர் இருந்ததாக தெரிவித்தார். நான் சொத்தை வாங்குவதற்கு எல்ஐசி யிடம் கடன் பெற்றேன் என்றால் சரிதான். சுமார் 3 மாதங்களுக்கு முன்பாக அந்த கடனை எல்ஐசி யிடம் இருந்து பஜாஜ் பைனான்ஸ் நிறுவனத்திற்கு மாற்றினேன். நான் எல்ஐசி நிறுவனத்திடம் சொத்தை அடமானம் எழுதிக்கொடுத்த ஆவணத்தின் நகல் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.13 உத்தரவில் 1951 இந்து சமய அறநிலையத்துறை சட்டம் 1951 ன் படி வழங்கப்பட்டதாக

சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். கன்னியாகுமரி மாவட்டம் 01.11.1956 தான் தமிழ்நாட்டுடன் இணைந்தது என்றாலும் அதற்கு முன்பு திருவிதாங்கூர் மற்றும் கொச்சின் சட்டங்கள் வழக்கு சொத்திற்கு பொருந்தும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ல் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்று மட்டும்தான் சொல்லப்பட்டுள்ளது என்றாலும் எந்த உரிமையும் அனுபவத்தில் இருந்து வருகிறார் என சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. 1949 முதல் குமாரசாமி பணிக்கர் உரிமையாளர் என்ற உரிமையில் வீடு கட்டி குடியிருக்கிறார் என சொல்லப்பட்டிருக்கிறது.

8) வா.சா.ஆ.13 உத்தரவில் உடமூட்டு தர்மம் அறங்காவலரிடம் இருந்து குத்தகைக்கு எடுத்து அனுபவத்தில் குமாரசாமி பணிக்கரின் முன்ஜன்மிகள் இருந்து வந்தததாக கூறப்பட்டுள்ளது என்றால் 1949 ம் ஆண்டிற்கு முன்பே அவ்வாறு இருந்து வந்ததாக கூறப்பட்டுள்ளது. வா.சா.ஆ.13 ல் உடமூட்டு தர்மத்தின் அறங்காவலர்கள் தரப்பினராக சேர்க்கப்படவில்லை என்றால் உடமூட்டு தர்மத்திற்காக செயல் அலுவலர் கட்சி சேர்க்கப்பட்டுள்ளார். திருச்செந்துார் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் நிர்வாகத்தின் கீழ் 2008 ம் ஆண்டு முதல் உடமூட்டு தர்மம் கொண்டுவரப்பட்டது என்றால் சரியல்ல. புல எண்.ஜி1/95, ஜி1/96 சொத்துக்கள் சேர்க்கப்படவில்லை மற்ற புல எண்கள் குறித்து எனக்கு தெரியாது. பிரதிவாதி பதிலுரையில் பத்தி 5 ல் 2008 ம் ஆண்டு உடமூட்டு தர்மம் அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோவில் அலுவலர் தகுதியான நபராக நியமிக்கப்பட்டு நிர்வாகத்தை எடுத்துக்கொண்டதாக சொல்லியுள்ளார் என்றால் அவர்கள் பதிலுரையில் அவ்வாறு சொல்லியுள்ளார்கள். வா.சா.ஆ.5 உத்தரவில் சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் செயல் அலுவலர் உடமூட்டு தர்மம் தக்காராக நியமிக்கப்பட்ட உத்தரவு விவரம் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் வா.சா.ஆ.5 ல் ம.சா.ஆ.1 ஆக சொல்லப்பட்டுள்ளது.

9) கதவு எண்.443 என்றால் கதவு எண்.1/443 எம்எஸ் ரோடு ஆகும். நான் கட்டிட வரி ரசீது தாக்கல் செய்யவில்லை கட்டிட வரி என் பெயருக்கு மாற்றப்பட்டுவிட்டது என்றால் இல்லை. காமராஜ், சுனிதா அவர்கள் பெயரில் கட்டிட வரி உள்ளது. நிலத்திற்கான நில வரி என் பெயரில் மாற்றப்பட்டதாக சொல்வதற்கு வட்டாட்சியர் பிறப்பிக்கும் உத்தரவை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் பெயரில் 2021 ம் ஆண்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது. ஒரு நிலத்திற்கு

ஒரு பசலிக்கு நில வரி ஒரு நபரிடம் இருந்து மட்டும் வசூலிக்கப்படும் என்றால் இரண்டு ஆறு மாத காலத்திற்கு ஒரு பசலி ஆண்டு நில வரி வசூல் செய்யப்படும். வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.11 ஒரே பசலிக்கு இரு நபர்கள் பெயரில் ஒரே பட்டா நம்பர் சொத்திற்கு வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். 2 வது மாதம் காமராஜ், சுனிதா பெயரிலும் எனக்கு ஆறாவது மாதம் என் பெயரிலும் வழங்கப்பட்டதாக உள்ளது.

10) வா.சா.ஆ.3 மற்றும் 11 ரசீதுகளில் கிராம நிர்வாக அதிகாரி கையொப்பத்தின் கீழ் அவர்களின் அலுவலக முத்திரை பதியப்படவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் அரசு கோபுர முத்திரை உள்ளது. வா.சா.ஆ.3 மற்றும் 11 ரசீதுகள் என்னால் முறையற்ற முறையில் வருவாய்த்துறை அலுவலர்களை சுவாதீனப்படுத்தி பெறப்பட்டது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.12 கர ரசீதகள் வெவ்வேறு பட்டா எண்களுக்கு வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். 2023 ம் ஆண்டு நடைபெற்று வந்த நகர மறு அளவீடு காரணமாக பட்டா வழங்கப்படாமல் உள்ளது என்றாலும் ஆகையால் நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.12 மோசடியாக பெறப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதி தாக்கல் செய்துள்ள பதிலுரையில் வழக்குச்சொத்தில் எனக்கு உரிமை இல்லை என்று ஆவண விவரங்களுடன் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரியல்ல.

11) தாவா சொத்தின் கிரைய மதிப்பு எவ்வளவு என்றால் என் கிரைய ஆவணத்தில் ரூ.62,50,000/- என பதியப்பட்டது. சொத்தின் விசித்தீரணம் 3.342 செண்ட் ஆகும். நான் கிரையம் வாங்குவதற்கு முன்பு வழக்குச்சொத்து மற்றும் அதன் அருகில் உள்ள சொத்துக்கள் தாவா சொத்துக்கள் என்று எனக்கு தெரியும் என்றால் தெரியாது. காமராஜ், சுனிதா ஆகியோர் எனக்கு முன் வழக்குகள் குறித்து சொல்லவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் பக்கம் 3 ல் முந்தைய வழக்கு விவரங்கள் குறித்து நான் குறிப்பிட்டுள்ளது எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் அந்த அறிவிப்பு ஒட்டப்பட்ட பின் நான் விசாரித்து தெரிந்துகொண்டேன். வழக்குச்சொத்து எனக்கு நான் கிரையம் பெற்ற பின்புதான் சம்பந்தம் என்றாலும் அதற்கு முன்பு எனக்கு அந்த சொத்துடன் எனக்கு எந்த சம்பந்தமும் இல்லை என்றால் அதற்கு முன்பு வாடகைக்கு இருந்து வந்தேன். அதனால் வழக்கு சொத்துடன் எனக்கு சம்பந்தம். என் சொத்திற்கு வடக்கு பக்கம் எம்.எஸ்.ரோடு தெற்கு பக்கம் பாதை கிழக்கு பக்கம் பொன்னையா கோனார்

சொத்து. மேற்கு பக்கம் ராஜகோபால் சொத்து அதில் தற்போது சுகுனா சிக்கன் கடை உள்ளது என்றால் சரிதான். அந்த எல்கைக்குட்பட்ட சொத்துதான் வா.சா.ஆ.5 உத்தரவிற்கு உட்பட்ட சொத்து என்றால் சரிதான். அந்த உத்தரவில் புல எண்.ஜி1/95, ஜி1/96 குறிப்பிடாமல் ஜி1/75 முதல் ஜி1/107 மற்றும் ஜி1/10 முதல் ஜி1/16 என குறிப்பிட்டுள்ளார்கள்.

12) 1907 முதல் வழக்குச்சொத்து உடமூட்டு தர்மம் வகைக்கு இருந்து வருகிறது என்றால் எனக்கு தெரியாது. செட்டில்மெண்ட் அதிகாரிக்கு உரிமையின் அடிப்படையில் மட்டுமே பட்டா வழங்க இயலும் என்றாலும் அனுபவத்தின் அடிப்படையில் உரிமையை ஏற்படுத்து பட்டா வழங்க இயலாது என்றாலும் ஆகையால் வா.சா.ஆ.13 செல்லாத ஆவணம் என்றாலும் சரியல்ல. 1956 அக்டோபர் மாதம் வரை திருவிதாங்கூர் கொச்சின் சட்டம்தான் அமலில் இருந்தது என்றாலும் ஆகையால் 30.09.1951 ல் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு சட்டம் பொருந்தாது என்றால் சரியல்ல. நான் திருக்கோவில் நிர்வாகம் ஆக்கிரமிப்பை அகற்ற சட்டப்பூர்வமாக எடுத்த நடவடிக்கையை தாமதப்படுத்த இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எனக்கு இந்த வழக்கு பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

13) இந்த சமய அறநிலையத்துறை சட்டப்பிரிவு 78 ன் கீழ் எடுக்கப்படும் நடவடிக்கைகளை தடை செய்து கேட்க எனக்கு எந்த உரிமையும் கிடையாது என்றால் சரியல்ல. 26.08.2021 அன்று உத்தரவு சொத்தில் ஒட்டப்பட்டதாக சொல்வதற்கு முன்பே 2017 ம் ஆண்டு அந்த உத்தரவு வழக்கு சொத்தில் ஒட்டப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு ஒட்டியிருந்தால் இந்த வழக்குச்சொத்தை கிரையம் வாங்கியிருக்கமாட்டேன். 26.08.2021 அன்று உத்தரவை ஒட்டிய பின்பு என்னை அழைத்து எனக்கு விவரம் சொன்னார்கள் என்றால் சொல்லவில்லை. 26.08.2021 ற்கு பின் நான் நீதிப்பேராணை மனு தாக்கல் செய்தேன் என்றால் 30.08.2021 அன்று என்னை ஒழிப்பிக்க வந்தார்கள். நான் அவ்வாறு ஒழிப்பிக்க வந்த அலுவலரிடம் மனு எதுவும் கொடுத்தேனா என்றால் இந்த வழக்கு தாக்கல் செய்து கோப்புக்கு எடுக்கப்படாமல் இருந்தது. அந்த விவரத்தை நேரடியாக சொன்னேன்.

14) அதன்பின் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் விசாரணை நடைபெற்றது என்றால் ஆம். வருவாய் கோட்டாட்சியர் வாய்மொழியாக வழக்குச்சொத்து குறித்து புல எண்.ஜி1/95, ஜி1/96 குறிப்பிடப்படாததால் என்னை தொந்தரவு செய்யக்கூடாது என தெரிவித்தார். 30.08.2021 க்கு முன்பே நான் வழக்குத்தாக்கல் செய்துவிட்டதால் நான் இந்த வழக்கிற்கு மூலக்காரணமாக சொல்லிய விவரம் உண்மைக்கு மாறானது என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு செலவுத்தொகையும் நஷ்டமும் கொடுக்க கடமைப்பட்டவன் என்றால் சரியல்ல.

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை

1, 2 பிரதிவாதிகள் தரப்பில் 3ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டு பதியப்பட்டது.